Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.NO.288/2022, Cr.No.171/2016, Kurisilapet PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | ஆனந்தன் |
| **வயது** | 63 |
| **தந்தை/கணவர் பெயர்** | மாதவன் |
| **கிராமம்** | கூடப்பட்டு |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 01.10.2016–ஆம் தேதியன்று இரவு சுமார் 07.00 மணியளவில் எனது வீட்டிற்கு வெளியே உள்ள திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது விஸ்வநாதன் அவரது வீட்டிற்குள் இருந்தபோது, ஆஜர் எதிரி ஆகாஷ் என்பவர் மதுபோதையில், அ.சா.1–இடம் அவர் அளித்த பணத்தைக் கேட்டு, "தேவிடியா பையா" என்று அசிங்கமான வார்த்தையால் திட்டினார். அதைக் கேட்டு அ.சா.1 வீட்டிற்கு வெளியே வந்து நான் பணம் வாங்கவில்லை என்று கூறியபோது, ஏற்பட்ட வாக்குவாதத்தில் எதிரியுடன் கைகலப்பு ஏற்பட்டது. எதிரியானவர் சாலையில் இருந்த கல்லை எடுத்து அ.சா.1–இன் தலைமீது அடித்தார். அதை நான் நேரடியாகப் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் எதிரியானவர் அ.சா.1–ஐ அடித்தார். ஆஜர் எதிரிதான் அ.சா.1–ஐ கல்லால் தாக்கியவர் என்று சாட்சி அடையாளர் காட்டினார். நடந்த சம்பவம் குறித்து S.R.ராஜேந்திரன் அவர்களுக்கு தகவல் சொன்னேன். அவர் குரிசிலாப்பட்டு காவல் நிலையத்திற்கு போன்செய்தார். பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அங்கு சோதனை செய்தார்கள். பின்னர் எதிரியானவர் பக்கத்தில் இருந்த கரும்பு தோட்டத்தில் மறைந்திருந்தார். மறுநாள் குரிசிலாப்பட்டுக்

காவல்நிலையத்தில் புகார் அளித்தார்கள். போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் 11.00 மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, அவர்கள் எடுத்துவந்த Statement–இல் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த ரஞ்சித் என்பவர் இறந்துவிட்டார். போலீசார் சம்பவ இடத்தில் ஸ்கெட்ச் வரைந்தார்கள். போலீசார் சம்பவ இடத்தில் இருந்து எதிரி அ.சா.1–ஐ அடிக்கப் பயன்படுத்திய கல்லை ஜெயந்தி எடுத்து ஆஜர் செய்ய கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த ரஞ்சித் என்பவர் இறந்துவிட்டார். இச்சம்பவம் குறித்து போலீசார் நான்வீட்டிலிருந்தபோது, விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

சம்பவம் நடந்தபோது அ.சா.1 மது அருந்தியிருந்தார் என்றால் சரிதான். விஸ்வநாதனிடம் எதிரியிடம் வாங்கிய பணத்தை ஏன் திருப்பிக்கொடுக்கவில்லை என்று நான் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. சம்பவ இடத்திற்கு வந்த போலீசாரை எனக்கு அடையாளம் தெரியாது. நான் பார்க்கவில்லை. போலீசார் வரும்போது அ.சா.1 மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். அ.சா.1–உடன் அவரது மனைவியும் அவரது மகனும் 3 – 4 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையின்போது உடனிருந்தார்கள். போலீசார் எடுத்து வந்த Statement–இல் நான் கையொப்பம் செய்த விவரத்தை என்னால் கூற இயலும். தற்போது எனது உடல்நிலை காரணமாக அதைப் பார்க்காமல் என்னால் கூற இயலாது. மறுநாள் சம்பவ இடத்திற்கு வந்த போலீசாரை எனக்குத் தெரியும். அவர்களின் விவரம் எனக்குத் தெரியாது. நேரில் பார்த்தால் அடையாளம் கூறுவேன். மறுநாள் வந்த போலீசார்தான் எழுதிஎடுத்து வந்தார் என்றால் சரிதான். அப்போது சம்பவ இடத்தில் நானும் இறந்துபோன ரஞ்சித்தும் மட்டுமே இருந்தோம். எங்களைத் தவிர போலீசார் வேறு யாரையும் விசாரிக்கவில்லை. எனது வீட்டிற்கும், அ.சா.1–இன் வீட்டிற்கும் 10அடி தொலைவு இருக்கும். மேலும் அங்கு நிறைய வீடுகள் உள்ளது. அந்த வீட்டில் உள்ள நபர்களை போலீசார் விசாரித்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. போலீசார் அவர்கள் வந்துபோனதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலீசார் என் முன்னிலையில் எந்த

சான்றுப்பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும், வந்து போனதற்காகத்தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றாலும் சரியல்ல. புகார் அளிக்கும்போது நானும் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்குப் போலீசார் வரவில்லை என்றாலும், நானும், ரஞ்சித்தும் காவல்நிலையத்தில்தான் கையொப்பம் செய்தோம் என்றாலும் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :— இல்லை**</u>

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.NO.288/2022, Cr.No.171/2016, Kurisilapet PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | |
|---|---|
| **பெயர்** | சத்தியமூர்த்தி |
| **வயது** | 30 |
| **தந்தை/கணவர் பெயர்** | விஸ்வநாதன் |
| **கிராமம்** | கூடப்பட்டு |
| **மாவட்டம்** | திருப்பத்தூர் |
| **தொழில்** | தனியார் ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of October 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் ஊழியராக இருந்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தகப்பனார் ஆவார். 01.10.2016–ஆம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் நான் எனது தந்தை, தாயார் மற்றும் தம்பியுடன் வீட்டில் இருந்தபோது, ஆஜர் எதிரியானவர் குடித்துவிட்டு வந்து, மரியாதைக்குறைவாக தேவிடியா பையா என்று எனது தாய், தந்தையரை திட்டினார். பின்னர் பேசிக்கொண்டிருந்தபோது, வாக்குவாதம் ஏற்பட்டபோது, எனது தந்தையை கல்லால் தலையின்மீதும், நெஞ்சின்மீதும் அடித்தார். நானும் எனது தாயும் சண்டையை விலக்கி விட்டோம். பின்னர் நானும் எனது தம்பியும், எனது தந்தையை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு 2–3 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். இச்சம்பவம் குறித்து குரிசிலாப்பட்டு காவல்நிலையத்தில் புகார் அளித்தோம். எதிரி எனது ஊரைச் சேர்ந்தவர். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் எனது தந்தையைத் தாக்கிய நபர் ஆவார். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 கல்லால் தான் எதிரி எனது தந்தையைத் தாக்கினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் நானும் எனது அம்மாவும் எழுத்துமூலமாக புகார் அளித்தோம் என்றால் சரிதான். புகாரில் நானும் கையொப்பம் செய்தேன். எனது தந்தை 3 நாட்கள் சிசிச்சையிலிருந்தபோது, நானும் எனது தயாரும் உடன் இருந்து பார்த்துக்கொண்டோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்து போலீசார் என்னை சுமார் பத்து நாட்கள் கழித்து விசாரித்திருப்பார்கள். எதிரிக்கும் எனது தம்பிக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்த தேதியில், எதிரிக்கு எனது தந்தை பணம் கொடுக்க வேண்டியிருந்ததால், அதைக் கேட்டதற்கு பொய்யான புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு குடிப்பழக்கம் உள்ளது. பணத்தைக் கேட்டபோது எனது தந்தைதான் எதிரியைத் தாக்கினார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது, நான் எனது தாயார் மற்றும் தம்பி வீட்டிற்குள் இருந்தோம் என்றால் சரியல்ல, வீட்டிற்கு வெளியில்தான் இருந்தோம். போலீசாரிடம் நானும் எனது தந்தையும் எழுத்துமூலமாக அளித்த புகாரில் வீட்டிற்கு வெளியே இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. இரவு 07.00 மணி என்பது இருட்டான நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தெருவிளக்குகள் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடமானது குண்டும் குழியுமான கற்கள் நிறைந்த பகுதி என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது இருட்டான நேரம் என்பதால் சா.பொ.1 கல்லை நான் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது நான் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. நான் வீட்டில்தான் இருந்தேன். நான் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு அருகில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 15 வீடுகள் உள்ளது. சம்பவம் நடைபெற்றதை அருகில் இருந்தவர்கள் பார்தார்களா என்றால் பார்த்திருப்பார்கள். அவர்கள் சண்டையை விலக்கிவிட்டு சென்றார்கள். ஆனந்தன் என்பவர் சண்டையை விலக்கிவிட்டார். சம்பவத்தின்போது அருகில் இருந்தவர்கள் பற்றியும், சண்டையை விலக்கிவிட்டவர்களைப்பற்றியும், நானும் எனது தந்தையும் எழுத்துமூலமாக அளித்த புகாரில் கூறியுள்ளோமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவத்தின்போது நடைபெற்ற தள்ளுமுள்ளுவில் எனது தந்தை கீழே விழுந்து காயம்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது தந்தை என்பதால், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை</u>**

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.